**வேலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil.,**

**ந.க. எண். 594 /SMC/மாஒ6/ஒபக/2022. நாள் : 26.04.2023.**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை கிராம சபை கூட்டத்தின் கூட்டப்பொருளாக இணைத்தல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2223/A11/பமேகு/ஒபக/2022, நாள்:24.04.2023.

*******

பார்வையில் காணும் சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மை குழுவின் மறு கட்டமைப்பு நடைமுறைகளானது கடந்த 2022 ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்றது. அதன் அடிப்படையில் புதிய உறுப்பினர்களைக் கொண்ட பள்ளி மேலாண்மை குழு கூட்டமானது மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமை நடைபெற்று வருகிறது.

அத்தனை அம்சங்களிலும் தன்னிறைவு பெற்றதாக ஒரு பள்ளியை மேம்படுத்த வேண்டுமானால், ஒட்டுமொத்தத் தேவைகளையும் கவனத்தில் கொண்டு பள்ளி மேம்பாட்டிற்கான தீர்மானங்களை நிறைவேற்றி பள்ளியின் வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக கிராம பஞ்சாயத்தின் நிலை குழுக்களில் ஒன்றான கல்விக்குழு இருந்து வருகிறது. இதன் மூலம் பள்ளி வளர்ச்சிக்கானத் தீர்மானங்களை நிறைவேற்றி கிராம பஞ்சாயத்துக்களின் பங்களிப்பை முழுமையாக உறுதி செய்ய முடியும்.

எனவே, கிராம சபை கூட்டங்களில் **பள்ளி வளர்ச்சி, கற்றல் கற்பித்தல், உட்கட்டமைப்பு, மாணவர் பாதுகாப்பு, பள்ளி இடைநிற்றல்** தொடர்பாக பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொள்வது அவசியமாகும். எதிர் வருகின்ற 2023 மே மாதம் 1_ஆம் நாள் **"உழைப்பாளர் தின"**த்தன்று நடைபெறவிருக்கும் கிராம சபை கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொண்டு விவாதிப்பது சம்பந்தமாக கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

வழிகாட்டுதல்கள்:

1. 2023 மே 1_ஆம் நாள் (திங்கட்கிழமை) நடைபெறவிருக்கும் கிராம சபை கூட்டத்தில் பள்ளியின் சார்பில் தலைமை ஆசிரியர் பள்ளி, மேலாண்மை குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
2. பள்ளி அமைந்துள்ள கிராம பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 10, 11 மற்றும் 12_ஆம் வகுப்பு தேர்வெழுதி தேர்ச்சி பெறாத மாணவர்களை ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் துணை தேர்வினை எழுதி பயனடைய கிராம பஞ்சாயத்து கல்விக் குழு மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கிட வேண்டும்.
3. தமிழ்நாடு அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் "உயர்கல்வி வழிகாட்டி மையம்" அமைக்கப்பட்டு 12_ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் மே மாதம் 5_ஆம் தேதி முதல் நடைபெற இருப்பதை கிராம சபை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
4. எனவே, மே மாதம் 5_ஆம் தேதி முதல் தங்கள் கிராம பகுதியில் உள்ள 12_ஆம் வகுப்பு மாணவர்களை பள்ளிக்கு அனுப்பி உயர்கல்வி வழிகாட்டி மையம் மூலம் வழிகாட்டுதல் பெற உதவுதல் வேண்டும்.
5. உயர்கல்வி வழிகாட்டுதல் குழு பற்றி கிராம சபை கூட்டத்தில் பகிர்ந்து, பெற்றோரும் மாணவர்களும் பயனடையும் வகையில் தகவல்களை பரவலாக்க தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும்.
6. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பள்ளி வளர்ச்சி, கற்றல் கற்பித்தல், உட்கட்டமைப்பு, மாணவர் பாதுகாப்பு, பள்ளி இடைநிற்றல் போன்றவை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை முறைப்படி தொகுத்து கிராமசபை கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு ஆலோசனைகளை கேட்டுக்கொள்ள வேண்டும்.
7. கிராம சபை கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் கிராம பஞ்சாயத்து மக்களும் தங்கள் பள்ளி சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து கொண்டு தங்களின் பங்களிப்பை அளிக்க இயலும்.
8. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்கள் தொடர்பாக கிராம சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை / முடிவுகளை அடுத்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும்.
9. பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் கிராம சபை கூட்டத்திலும் பள்ளி மேலாண்மைக் குழு முதன்மை கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ள வேண்டும்.

மேற்காணும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை, வருகின்ற 2023 மே 1_ஆம் தேதி நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் முக்கிய கூட்டப் பொருளில் ஒன்றாக இணைக்க வலியுறுத்துமாறு அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

26/04/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

26/04/2023

பெறுநர் :

அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.

நகல்:

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
4. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தொடர் நடவடிக்கைக்காக.
5. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) தொடர் நடவடிக்கைக்காக.
6. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்.
7. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ).